சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.எண்.92/2020

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. தினேஷ் குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமார் | வயது | 54 |
| த/பெ | ரங்கசாமி | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | பிள்ளையார் கோவில் வீதி, காரமடை | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | விவசாயம் |

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

தாவா சொத்து ஆரம்ப கால கட்டத்தில் யார் பெயரில் இருந்தது என்றால் எனது தாத்தா இராமைய கவுடர் பெயரில் இருந்தது. பூர்வீக சொத்தை விற்று எனது அப்பா கிரையம் வாங்கினார். தாவா சொத்துக்கள் எனது தாத்தா பெயரில் இருந்ததை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து இராமைய கவுடருக்கு எவ்வாறு பாத்தியம் என்று தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. அடங்கல் யார் பெயரில் உள்ளதோ அவர் தான் பொதுவாக அந்த சொத்தின் அனுபவத்தில் இருப்பார் என்றால் எனக்கு தெரியாது. வருவாய் ஆவணங்கள் எதன் அடிப்படையில் ஏற்படுத்தப்படுகிறது என்ற விபரம் எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு வாதிகள் பெயரில் வருவாய் ஆவணங்கள் எந்த காலத்திலும் இருந்தது இல்லை என்றால் சரி தான். என்னுடைய நிரூபண வாக்குமூலம் யார், எங்கு வைத்து தயார் செய்தது என்றால் நான் சொல்லி எனது

வழக்கறிஞர் தயார் செய்தார். எந்த தேதியில் தயார் செய்யப்பட்டது என்றால் தேதி தெரியாது. அதில் என்ன சங்கதி உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாததால் அதில் என்ன உள்ளது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து எந்த புல எண்ணில் உள்ளது என்றால் எனக்கு நினைவு இல்லை. தாவா சொத்து எவ்வளவு விஸ்தீரனத்தில் உள்ளது என்றால் 4 ஏக்கர் 64 செண்ட் உள்ளது. எந்த எந்த புல எண்ணில் எவ்வளவு விஸ்தீரனத்தில் உள்ளது என்றால் நினைவு இல்லை. தாவா சொத்தை 1 ஆம் பிரதிவாதியும், எனது அப்பா இரங்கசாமியும் தான் கிரையம் பெற்றார்கள் என்றால் சரி அல்ல. பூர்வீக சொத்து ஆகும். கிரையப் பத்திரம் அவர்கள் இருவர் பெயரில் தான் உள்ளது என்றால் சரி தான். எனது தாத்தா பெயரிலும் உள்ளது. எந்த தேதியில் கிரையம் பெறப்பட்டது என்றால் தேதி தெரியாது. அந்த 3 பேர் பெயரிலும் உள்ள பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி அல்ல. தாவா சொத்துக்கள் எனது தாத்தா இராமைய கவுடர் பெயரில் இருப்பதால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளோம் என்றால் சரி தான். தாவா சொத்துக்களின் பத்திரம் எனது தாத்தா இராமைய கவுடரின் பெயரில் இல்லை என்றால் தாவா சொத்து எங்களுக்கு உரிமை இல்லை என்றால் தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதால் உரிமை கேட்கிறோம். தாவா சொத்தை எனது அப்பா அடமானம் வைத்து வாங்கினார் என்றால் அடமானம் வைக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்த சமயத்தில் நான் பிறக்கவில்லை என்றால் சரி அல்ல. பிறந்து சிறு பையனாக இருந்தேன். என்னுடைய பிறந்த தேதி தெரியாது. 1955 ல் பிறந்தேன். அப்படி என்றால் நான் 1966 ல் பிறந்து இருக்க முடியாது என்றால் சரி தான். எனது அப்பா எந்த காலத்தில் என்ன காரணத்திற்காக

அடமானம் வைத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரி தான். அந்த அடமானக் கடன் மற்றும் வேறு நபர்களிடம் வாங்கிய கடனை தீர்ப்பதற்காக எனது அப்பா இரங்கசாமி தாவா சொத்துகளில் அவருக்கு பாத்தியப்பட்ட ஒரு பகுதியை கிரையம் கொடுத்தார் என்றால் அவர் கிரையம் கொடுத்தது எங்களுக்கு தெரியாமல் கொடுத்தார். என்ன காரணத்திற்காக எந்த தேதியில் கிரையம் கொடுத்தார் என்ற விபரம் இது நாள் வரை எங்களுக்கு தெரியாது என்றால் எனது அப்பா இறந்த பின்னர் தெரியும். எனது அப்பா மாதையன் என்பவர் பெயரில் எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தை இந்த வழக்கில் வா.சா.ஆ.10 ஆக தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி தான். அந்த ஆவணத்தை படித்துப் பார்த்தேனா என்றால் எனக்கு படிக்கத் தெரியாததால் படித்துச் சொன்னார்கள். வா.சா.ஆ.10 ல் 02.06.1969 அன்றே கிரைய பத்திரத்தில் பெற்ற சொத்திற்கு முன் தொகையாக மாதையனிடம் பெற்றுக் கொண்டதாக கூறப்பட்டு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதே போல 04.02.1966 அன்று சிவனப்ப கவுடர் மகன் மாதையனிடம் ரூ.1000/- க்கு அடமானம் வைத்ததாகவும் வா.சா.ஆ.10 ல் கூறப்பட்டு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.10 ல் சிவனப்ப கவுடர் மகன் மாதையனிடம் அடமானம் வைத்து தான் வா.சா.ஆ.10 ஐ கிரையம் பெற்றதாக கூறப்பட்டு உள்ளது என்றால் அடமானம் வைக்க வேண்டிய அவசியம் இல்லை. 02.04.1967 அன்று மாதையனிடம் எனது அப்பா பிராமிசரி நோட்டின் அடிப்படையில் ரூ.900/- க்கு கடன் பெற்று உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு பெற்ற கடன்களை தீர்ப்பதற்காகத் தான் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை எனது அப்பா மாதையன் என்பவருக்கு கிரையம் கொடுத்து

விட்டார் என்றால் சரி அல்ல. 1970 ல் இருந்து இன்று வரை தாவா சொத்துக்களுக்கான வருவாய் ஆவணங்கள் மாதையன் பெயரிலும் அவருடன் கிரையம் பெற்ற 4 ஆம் பிரதிவாதி செந்தில் குமார் பெயரிலும் உள்ளது என்றால் சரி அல்ல. தாவா சொத்திற்கு எந்த எந்த கால கட்டத்தில் யார் யார் பெயருக்கு வருவாய் ஆவணங்கள் இருந்தன என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. கிரையம் பெற்ற சொத்துக்களை மாதையனும் அதன் பிறகு 4 ஆம் பிரதிவாதி செந்தில் குமாரும் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரி அல்ல. நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். எந்த கால கட்டத்தில் இருந்து நாங்கள் அனுபவித்து வருகிறோம் என்றால் நாங்கள் ஆரம்பத்தில் இருந்தே அனுபவித்து வருகிறோம். நாங்கள் தான் நீண்ட நாட்களாக அனுபவித்து வருகிறோம் என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்ய வில்லை என்றால் சரி அல்ல. தாவா சொத்தில் நாங்கள் எந்த காலத்திலும் அனுபவித்தது இல்லை என்றும், அதில் எங்களுக்கு எந்த வித உரிமையும் இல்லை என்றும் அதனால் தான் தாவா சொத்தில் எங்களது அனுபவத்தை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்ய இயலவில்லை.

( 4 ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது )

| |
|---|
| மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது. |

ஒம்/- கா. கெங்காராஜ்.
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.